கொங்கு

ஆசிரியர்:
புலவர் செ. இராசு

30 காசு

அறிவியல் வரலாற்றுத் திங்களிதழ்

சித்திரை 2005 1974 ஏப்ரல்

கொங்கு

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ

தேனடை 4 | 15-4-74 | தேனீ 4

வணக்கம்.

"தம்மைப் போல பிறரை நினை" என்பது தமிழகத்தின் பழைமையான மொழி. அப்பொன் மொழியும் பொருந்தாத இடம் ஒன்றுண்டு. அதுதான் 'அறிவு'.

குறிப்பாக ஆசிரியர்கள் தம் மாணவர்கள் தம்மைப் போன்றவர்களே என்று நினைத்தல் கூடாது. தம்மினும் மிக்க அறிவுடையோராக வளருவர் என்ற நம்பிக்கை வேண்டும். எனவே மாணவர்களுக்கு வாங்கி அளிக்கும் நூல்கள் தம் அறிவுத் தரத்திற்கு இருந்தால் போதுமென்று நினையாமல் அதற்கு மேம்பட்ட நிலையில் இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். உயர்ந்த தரமுள்ள நூல்களை இளமைக் காலத்தில் பார்த்து வைக்கும் வாய்ப்பு, பின்னால் அவர்களின் அறிவும் ஆர்வமும் அத்திசையில் திரும்ப வாய்ப்பாக அமையும்.

தரமான நூல்கள் வாங்குவதை மாவட்டக் கல்வி அதிகாரிகள், சில இடங்களில் தணிக்கை செய்து தடுப்பதாகத் தகவல் வருகிறது. மாணவர் அறிவு முடுக்கம் (acceleration) கொண்டது. நல்ல நூல்கள், நல்ல திசையைக் காட்டும். அறிவாளிகள் தோன்ற வழிபிறக்கும்.

மாவட்ட மைய நூலகங்களும் இதே வழியில் வாசகர்களுக்கு எது பிடிக்கும் என்பதோடு, எது வேண்டும் என எதிர்நோக்கி, நல்ல நூல்கள் நூலகத்தில் இடம்பெற வேண்டும். எல்லா நூல்களும் எல்லோரும் படிக்குமாறு இருக்க வேண்டுமென்ற எண்ணம் அறிவு நூல்களும் தரமான நூல்களும் தோன்றுவதை தடுக்கும். நூலக விஞ்ஞானிகள் இதுபற்றிச் சிந்தித்தல் நலம்.

—ஆசிரியர்.

செவ்வாய்க் கோளுக்கு மனிதன் பயணம்?

கோளிடைப் பயணம் குறித்த பல பிரச்சினைகள் தீர்க்கப் பட்டு விட்டன. பூமியிலிருந்து வெள்ளிக்கும், செவ்வாய்க்கும் தன்னியக்கக் கோள்கள் பல ஏவப்பட்டு, அவை அக்கோள்களைப் பற்றிய பல விவரங்களைக் கொடுத்துள்ளன. நீண்ட நெடுங் காலப் பயணத்தைத் தாங்குவதற்கும், நெடுந்தூரத்திலிருந்து செய்திகளை அனுப்புவதற்கும் ஆன பல விசேச உத்திகளும் கருவிகளும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. புதிய கோளிடை விண் கப்பல்களைப் பரிசோதித்துப் பார்ப்பதற்கும் நமக்கு வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

செவ்வாய்க் கோளின் வாயு மண்டலம், தட்ப, வெட்பநிலை ஆகியவை பற்றிய விவரங்களை, சோவியத், அமெரிக்க தன்னியக்க ஆய்வு கலன்கள் ஆராய்ந்து அறிவித்துள்ளன அக்கோளின் மேற்பரப்பு குறித்த விவரங்களும், புகைப்பட வடிவில் நமக்குக் கிடைத்துள்ளன. செவ்வாய்க் கோளில் கடுமையான நிலைகள் இருப்பதாக நமக்குத் தெரிய வந்துள்ளது. அங்குள்ள வாயு மண்டலம் மிகவும் அடர்த்தி குறைந்தது; மிகக் குளிர்ச்சியானது; அதில் ஆக்சிசனோ, நீரோ கிடையாது. செவ்வாய்க் கோளின் மேற்பரப்பு, சந்திரனுடையதைப் போன்று. பல வெடிப்புக்களைக் கொண்டதாக உள்ளது. சிவந்த-பழுப்பு நிற மணலால் அது மூடப்பட்டுள்ளது. செவ்வாய்க் கோளின் ஆகாயத்தில் பிரகாசிக் கும் சூரியன், மிகச் சிறியதாக உள்ளது. அதுதரும் வெம்மை யும் மிகக்குறைவே.

என்றாலும், இவையனைத்தும், செவ்வாய்க்கோள் பயணத் திற்குத் தீவிரத் தடைகள் அல்ல. இதைவிட மோசமான சூழ் நிலைகளிலும், மனிதனது சீவாதாரக் கிரியைகளைக் காக்கும் திறன்படைத்த விசேட விண்வெளி உடைகளை நாம் ஏற்கனவே கண்டுபிடித்துள்ளோம்.

மனிதன் செவ்வாய்க்கோளுக்கு சென்று திரும்பினால், அக்கோளைப்பற்றிய பற்பல விவரங்களையும் அவன் நேரில் கண்டு வருதல் சாத்தியமே. இதுகாறும் நாம் கருதிவந்ததைப் போல,

செவ்வாய்க்கோள், உயிரினமற்ற, ஒரு சடக்கோள் தானு? அல்லது அங்கு நமது பூமியிலிருப்பதைப் போன்று இல்லையெனினும், மாறுபட்ட வேறுவகை உயிரினங்கள் வாழ்ந்த தடயங்களேனும் நமக்குக் கிட்டுமா? அத்தகைய கேள்விகளுக்கு விடையளிப்பதற்கு, மனிதன் அங்கு சென்று வருவதே சிறந்ததாகும்

ஒருவேளை செவ்வாய்க் கோளின் வளர்ச்சி முழுமையடைந்து, முற்றுப்புள்ளி பெற்றிருக்கக் கூடுமோ? அதன் காரணமாக, அது குளிர்ச்சியடைந்து, தனது வாயுமண்டலத்தின் ஒரு பகுதியை இழந்திருக்குமோ? பத்து, நூறு, லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர், அக்கோளில் கடல்களும், நதிகளும் மலைகளும், பள்ளத்தாக்குகளும், நூதனமான காடுகளும் பரவிப் பெருகி இருந்தனவா? அவை மட்டுமன்றி, வானளாவிய கட்டடங்களும், சுவடு தெரியாது அழிந்துபட்ட நகரங்களும்கூட இருந்தனவா? அவற்றின் தடயங்களை நாம் கண்டுபிடிக்க முடியுமா?

இவையெல்லாம் நாம் அறிந்து கொள்ளத் துடிக்கும் கேள்விகள். அப்படியானல், செவ்வாய்க்கோள் பயணத்திற்கு இன்னும் மனிதன் தேதி குறிக்காதது ஏன்?

நீண்ட நெடிய பயணம்

செவ்வாய்க் கோளுக்கு மனிதன் பயணம் செய்வதற்குப் பிரதான தடையாகயிருப்பது, பயணகாலம் மிக நீண்டிருப்பதே. பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையே உள்ள தூரம் 4 கோடியிலிருந்து 24 கோடி மைல்கள் வரை வேறுபடுகிறது. அதாவது பூமியும் செவ்வாயும் நெருங்கி வரும்போது உள்ள குறைந்தபட்ச தூரம் 4 கோடி மைல்களாகும்.

குறுகிய பயண தூரத்தையும் குறைந்தபட்ச எரிபொருள் பயனீட்டையும் நாம் நிர்ணயித்து விடுதல் சாத்தியமே. மிகவும் சிக்கனமான, அதாவது குறைந்தபட்ச சுழல்பாதையில் செவ்வாய்க் கோளுக்குப் பயணத்தை மேற்கொள்ள வேண்டுமானல், அத்தகைய காலம் $2\frac{1}{2}$ ஆண்டுகளுக்கு ஒருமுறை ஒருசில தினங்களே நீடிக்கிறது. அதிலுள்ள சிக்கல் என்னவெனில், பூமியிலிருந்து புறப்பட்டு செவ்வாய்க்கோளை அடைவதற்கு 259 தினங்கள் ஆகின்றன. திரும்பி வருவதற்கும் அதே அளவு காலமாகும். ஆனல் 59 தினங்களில் பூமியை வந்தடையுமாறு செவ்வாய்க் கோளிலிருந்து பயணக்குழுவினர் புறப்பட வேண்டுமெனில், அவர்கள் அங்கு 450 தினங்கள் தங்க வேண்டும். அப்படியானல்

ஒரு முறை பயணம் சென்றுவர 968 நாட்கள் அதாவது $2\frac{1}{2}$ ஆண்டு கள் ஆகும்.

இரு கோள்களின் சில குறிப்பிட்ட நிலைகளைப் பொறுத்து பயணகால கட்டத்தை சற்று குறைப்பதும் சாத்தியமே. அத் தகையதொரு வாய்ப்பு 1981-ஆம் ஆண்டில் நமக்குக் கிட்டும்.

பூமியிலிருந்து செவ்வாய்க் கோளுக்கான மனிதர்களுடன் கூடிய ஆய்வுக்கலன் 1981 டிசம்பர் 28 ஆம் நாள் செலுத்தப்பட வேண்டும். அக்கலன் 220 தினங்கள் கழித்து, அதாவது 1982 ஆகச்டு 4-ஆம் தேதி செவ்வாய்க்கோளைச் சுற்றிய சுழல்பாதை யில் நுழையும். அச்சுழற்பாதையிலிருந்து தனியானதொரு கூட் டில் செவ்வாய்க்கோளில் இறங்கிய தங்கள் ஆய்வுகளை நடத்தி முடித்து மீண்டும் சுழல் பாதையிலுள்ள தாய்க்கலனுக்கு அவர் கள் வந்துசேர 20 தினங்கள் உள்ளன. 1982 ஆகச்டு 24-ல். அவர்களது பயணம் அங்கிருந்து பூமியை நோக்கித் தொடங்கப் பட்டால் 1983 மார்ச்சு 29-ஆம் தேதியன்று அக்கலன் பூமியை வந்தடையலாம். இந்தப் பயணத்திற்கு மொத்தம் 456 தினங்கள் ஆகின்றன.

எத்தனை எத்தனை பிரச்சினைகள்?

இன்னும் 7 ஆண்டுகள் கழித்து பூமியும் செவ்வாயும் இருக் கும் நிலைகளை ஒட்டி வகுக்கப்பட்ட பயணத்திட்டமே மேலே கூறப் பட்டது. இதைப்போன்று சந்தர்ப்பம் கிடைப்பது பல ஆண்டு களுக்கு ஒருமுறைதான். என்றாலும் இக்குறுகிய கால பயணத திற்கே 456 தினங்கள் ஆகின்றன எனும்போது, அதைச் சார்ந் துள்ள பல்வேறு பிரச்சினைகளையும் நாம் தீர்த்தாக வேண்டும். ஆய்வுக்கலனில் செல்லும் மனிதர்களுக்குப பெரும் அளவு உணவு, நீர், ஆக்சிசன் ஆகியவை 18 மாத காலத்திற்குத் தேவைப்படுகின் றன. மூடப்பட்ட ஒரு கூட்டிற்குள் மனிதனது சீவாதாரக் கிரியைகளுக்குத் தேவையான அனைத்தையும் உருவாக்கும் ஒரு சூழ்நிலை வட்டத்தைத் தோற்றுவிக்கும் வழிகள் குறித்து விஞ் ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர். அவர்கள் அதில் வெற்றி கண்டால், மனிதர்கள் விண்வெளிக் கலனில் எடுத்துச் செல்ல வேண்டிய பொருள்களின் எடை வெகுவாகக் குறைந்து விடும்

நீண்ட காலத்திற்கு பழுதின்றியியங்கும் தொலைதூரத் தன் னியக்கக் கட்டுப்பாட்டு அமைப்புகளையும் அதற்கான கருவிகளை யும் உருவாக்குவது மற்றொரு பிரச்சினை. அது உயர்ந்த நம்பகத் தன்மையுடன் கூடிய செய்திப் போக்குவரத்து அமைப்பு இல்லை

யெனில், விண்வெளிக் கலனில் ஒரு தொழிற் கூடத்தையும் அமைப்புக்களையும் பழுது பார்ப்பதற்குத் தேவையான தனித்தேர்ச்சி பெற்ற ஊழியர்களையும் அனுப்புவது அவசியமாகி விடலாம்.

இவை தவிர வைத்திய, உளவியல் பிரச்சினைகளும் பல உள்ளன. மற்றொரு பிரச்சினை, இந்தப்பிரமாண்டமான ஆய்வுக் கலனை விண்வெளியில் எப்படி ஏவுவது என்பதாகும். ஏனெனில் பூமியின் சுழற்பாதையில் செலுத்தப்படும் அத்தகைய ஆய்வுக் கலனின் எடை சில நூறு டன்கள் இருக்கும் என்று மதிப்பிடப் பட்டுள்ளது.

அத்தகைய விண்கலனை ஏவுவதற்குப் போதிய விசை தற்போது நம்மிடம் கிடையாது. பூமியைச் சுற்றிய சுழற்பாதையிலேயே பல்வேறு கூண்டுகளைக் கோத்திணைப்பது அவசியமாகும்.

எனவே, மனிதனது செவ்வாய்க்கோள் பயணம் ஆரம்பமாவதற்கு முன்னர் தீர்க்கப்பட வேண்டிய பிரச்சினைகள் ஆயிரம் உள்ளன.

சோ. சி. க.

ஈழத்தமிழ்

எழுத்துப் பெயர்த்தலில் ஒலிமுறை

ரி—T

றி—Re

டி—D

பேந்து—பிறகு, பின்பு

கனக்க—நிறைய, நிரம்ப

கொதியன்—முன்கோபி

கதிரை—நாற்காலி

கிழமை—வாரம்

கட்டை—மைல், கல்

முகத்தல் அளவு

4 சுண்டு—1 கொத்து

32 கொத்து—1 புசல்

தாந்தோணி

Dr. H. சர்க்கார்

பெருந்தரத் தொல்லியலர்

இந்தியத் தொல்லியல் அளக்கைத் துறை

திருச்சி மாவட்டம், கரூர்க் கருகில் தாந்தோனி என்னுமிடத்தில் நத்தம் புறம்போக்கிலுள்ள குன்றில் ஒரு முடிவுறாக் குகைக் கோயில் உள்ளது. பன்னிரண்டு அல்லது பதின்மூன்றாம் நூற்றாண்டில் தோன்றிய கல்யாணவெங்கடரமணசாமி கோயில் என்னும் பிற்காலப்பணி ஒன்றால் முற்றுமாக மறைந்து கிடக்கின்றது. பல வீர வரலாறுகள் நிறைந்த கரூருக்கு அருகிலிருந்த போதிலும், இக்காலத்திலும் மக்களின் கருத்தையும் கற்பனையையும் தொடாமல் போய்விட்டது.

கரூருக்குத் தென்மேற்காக 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது தாந்தோனி, (10⁰ 57' வ நேர்வரை. 78⁰ 04' கி நிரைவரை) சேரர்களின் தலைநகரத்தின் புறநகராக ஒருகாலத்தில் இருந்திருக்க வேண்டும். அப்படியிருந்தும், இக்குகையை யார் வெட்டினார்கள் என்றோ, ஏன் முற்றுப்பெறவில்லை யென்றோ தெரியவில்லை. காவிரியை எளிதில் தாண்டக்கூடிய துறைகள் பலவற்றின் அண்மையில் உள்ளதால் பூகோள முக்கியத்துவம் பெற்றுள்ளது. வழிவழிவந்த பரிசல் துறைகளான புகளூர் (சேரர் கல்வெட்டால் புகழ்ப்பெற்ற புகழியூர்), சீராமசுந்தரம் எனப்படும் அயிலூர், காவிரியின் வடகரையிலிருந்து நாமக்கல் செல்லும் பெரும்பாதைகள் குறிப்பிடத்தக்கன. காவிரியின் மறுகரையிலுள்ள கொங்கு நாட்டிலிருந்து பல ஆதிக்கங்களுக்கு இடமளித்திருக்குமென்பது வெள்ளிடைமலை கொங்கு நாட்டைக் கொள்ளச் சென்ற படையெடுப்புகள் பல இவ்வழியாக நிகழ்ந்திருக்கலாம்.

குகைக்கோயில், கட்டுக்கோயில் இவற்றுடன் சாலையோரமாக உள்ள பாறையில் சில புடைப்புச் சிற்பங்கள் காணப்படுகின்றன. நாலு குழுக்களாக அவை உள்ளன. ஒன்று அரங்கநாதர். இரண்டு, பசு மூலைப்பால் சொரியும் லிங்கம், அதனருகில் பசுபதி, கணேசர் அமர்ந்த வடிவங்கள். மூன்று, தாமரை மலரில்

TANDONI: UNFINISHED CAVE TEMPLE
DISTRICT: TIRUCHIRAPPALLI



இரண்டு பாதங்கள், ஒரு பக்தர், ஒரு நீளப்படுக்கை. நான்கு, நிற்கும் மனித உருவங்கள் மூன்று. தற்போதைய தரைமட்டத்தில் இவையனைத்தும் செதுக்கப் பட்டுள்ளன. கவர்ச்சியும். தரமும் குறைந்து காணப்படுகின்றன. ஒருகால், இவைகளுக்கும் அருகிலுள்ள குகைக்கோயிலுக்கும் எந்த உறவும் இல்லாமல் இருக்கலாம்.

குகைக்கோயிலைக் காண்போம். முடிவுறாக் குகை; மேற்கு நோக்கியது, திருமாலுக்கு. நெடிய நின்ற திருமேனி (A tall Sthanaka Image of Vishnu, in Samabhanga) பின் சுவரில் வெட்டப்பட்டுள்ளது. அதன் கலைநிலைகள் (stytistic feature) அணிமணிகளில் மறைந்துள்ளன. அதனால் கட்டிடக் கலைப்பாணி கொண்டே காலத்தைக் கணிக்க வேண்டியுள்ளது. மேற்போக்காகக் காணும்போது குமரிமாவட்டத்து அழகிய பாண்டிபுரத்துக்குகை, தென்னார்க்காடு மாவட்டக் கீழ்மாவிலங்கைக் குகை ஆகியவற்றுடன் சிலபொதுக் கற்பனைகள் (Commonness of idea) தோன்றுகின்றன. மூன்றிலும் பின்சுவரில் நெடிய நின்ற திருமேனிகள் உள்ளன; மூன்றும் முற்றுப்பெறுமலே உள்ளன. இக் குகையின் வெட்டு அமைப்பு, நாமக்கல் இலக்குமிநரசிம்மசாமி குகையோடு அதிகம் பொருந்துகின்றது. முன்னர் கூறிய இரண்டு குகைகளைவிட அளவில் பெரிதான தாங்தோனியின் விவரம் காண்போம்.

அளவுகளைப் பொருத்தவரையில் தாங்தோனிக்குகை, நாமக்கல் குகைகளுடன் ஒப்பிடலாம். குன்றின் நடுஉயரத்தில் 19'. 6' நீளம் 14'. 6'' அகலம் 9', 9'' உயரத்திற்கு வெட்டப்பட்டுள்ளது. நாமக்கல் அரங்கநாதசாமி குகையிலும், தாந்தோனிக் குகையிலும், திருமாலின் கிடந்த கோலம் (துயில் கோலம்) இல்லாத போதிலும், இம்மூன்று குகைகளும் அகலவாட்டிலேயே (oblong) அமைந்துள்ளன. நாமக்கல் அரங்கநாதர் குகையும் தாங்தோனியும் கட்டிடப்பாணியில் வரைபடத்தில் ஒத்திருக்கின்றன; இரண்டிலும் நடுக்கருவறை உயர்ந்தும், மூன்று பக்கமும் சற்றே தாழ்ந்த சுற்றுப்பாதையும் உள்ளன. பாதை சற்றேறத்தாழ 4 அடி அகலம் உள்ளது. முன்னுலுள்ள இரண்டு முடிவுபெறுத் தூண்கள் கருவறையின் முன்சுவர் போல அமைந்துள்ளன. அதனல் மூன்று பக்கம் வழி உள்ளது. சுற்றுப்பாதை பின்பக்கம் இல்லையாதலால், முழுப்பிரதட்சினப் பாதை இல்லை. இத் தூண்கள் கொண்ட கருவறைப் பின்சுவரிலேயே நின்றதிருமேனி செதுக்கப் பட்டுள்ளது.

தாங்தோனியில், (நாமக்கல்லைப் போலவே) ஒரு அர்த்த மண்டபமும் உள்ளது அதன் முகப்பும் திருத்தமாகச் செதுக்கப்பட்டுள்ளது. குகையின் உட்புறத்தில் இருந்ததைவிட இங்கு அதிக வேலைப்பாட்டுடன் செப்பமாக வெட்டப்பட்டுள்ளது. முகப்பில் கொடிவேலைகளும், கபோதகமும், பூதகண வரிசையும் உள்ளன. அழகான இரண்டு துவாரபாலகர் சிலைகளும் உள்ளன.

பூதகணங்கள் விளையாடும் கோலத்தில் புன்சிரிப்புடன் காணப்படுகின்றன. இப்பூதங்களை வாதாபியிலுள்ள இரண்டாவது குகைப் பூதங்களோடு ஒப்பிடலாம். நாமக்கல் பாணி, சளுக்கிய, பல்லவ மரபுகளின் இணைப்பென்று பொதுவாகக் கருதப்படுகின்றது. அதனால்தான்தோனிப் பூதங்களைக் கொண்டு, அவை நேரடியாக வாதாபியின தாக்கமோ, அல்லது நாமக்கல்லின தாக்கமோ பெற்றிருக்கலாமென்று எண்ணலாம்; எனினும் பிற கட்டிடப்பாணிகளைக் கொண்டு பார்த்தால் நாமக்கல்லின் தாக்கமே பொருத்தமானதென்று முடிவு செய்யலாம்.

நாமக்கல் அரங்கநாதசாமி குகையும், இலக்குமி நரசிம்மசாமி குகையும், தகடூர் அதியர்களின் பணியென்பது உலகறிந்த செய்தி. இரண்டும் வியத்தகு கலைவேலைப்பாடுகள் மிக்கவை அரங்கநாதசாமிக் குகையிலுள்ள எழுத்துக்களைக் கொண்டு அவை அதியேந்திர விட்ணு கிரகம் அல்லது அதியனாத விட்ணு கிரகம் என்று அறிகின்றோம். அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட எழுத்திலிருந்து அதை வெட்டுவித்தவன் குணசீலன் என்றறிகிறோம். சங்ககாலத்திலிருந்து தொடர்ந்து வரும் அதிகமான் பரம்பரையைச் சேர்ந்தவன் குணசீலன் என்பதில் ஐயமில்லை. நாமக்கல் குகைகள் வெட்டப்பட்டபோது அவன் தனியதிகாரம் செலுத்தி வந்திருக்க வேண்டும். அவன் ஆட்சி சிறிது காலம் காவிரியின் மறுகரையான கரூர்வரை எட்டியிருக்கலாம். பல்லவர் ஆட்சி நந்திவர்ம பல்லவமல்லனுக்குப் பின் (731-796) கொங்கு நாட்டில் சற்றே தளர்ந்திருக்கலாம். இரண்டாம் சளுக்கிய விக்கிரமாதித்தன் (733-744). காஞ்சியின் மீது படையெடுத்து வந்தபோது பல்லவன் காஞ்சியை விட்டு அகலவேண்டியிருந்தது. 742 முதல் 780 வரை பல்லவர்களின் ஆட்சி கொங்கு நாட்டின் மீது தளர்ந்தே இருந்தது. இக்கால கட்டத்தில் பல்லவர் கல்வெட்டுக்கள் இப்பகுதியில் ஒன்றுமே கிடைக்கவில்லை.

அதேபோல இக்காலகட்டத்தில் பாண்டியர்களும் பல்லவர்களோடு போரிட்டுக் கொண்டேயிருந்தனர். இதனால் கொங்கு நாட்டின்மீது பாண்டியர் ஆதிக்கமும் உறுதியாக இல்லை. பாண்டியன் கோச்சடையன் ரணதீரன் (700-730) கொங்கர் கோமான் எனப் பட்டப்பெயர் கொண்டிருந்தான்; அவன் பின்னவன் முதலாம் மாறவர்மன் இராசசிம்மன் (740-765) மழகொங்கத்தை அடிப்படுத்த காவிரியைக் கடந்ததாகச் சொல்லப்படுகிறது. அவன் பின்னவன் சடில பராந்தக நெடுஞ்சடையன் (768-815) அதிகனை, காவிரியின் வடகரையில் ஆயிரவேலி அயிலூரிலும்,

புகழியூரிலும் வென்றதாகத் தெரிகின்றது. வேள்விக்குடிச் செப்பேடு (770-71) இவ்வரலாற்றுப் போர்பற்றி ஒன்றும் கூருததால் இது சுமார் 780 இல் நிகழ்ந்திருக்கலாம். ஜடில பராந்தக நெடுஞ்சடையனின் இறுதி வெற்றிக்கு முன்னர் நாமக்கல்-கரூர் வட்டாரம் அதிகர்களின் ஆட்சியிலேயே இருந்திருக்கும்; அவனே குணசீலன். எனவே குணசீலன் காலத்தில் எட்டாம் நூற்ருண்டின் இறுதிக்காலத்தில் இது வெட்டப்பட்டிருக்கலாம் (circa 775). தாந்தோனி குகை முற்றுப் பெருமல் இருப்பது, அதன் வைணவத் தன்மை, நாமக்கல் குகையுடன் கட்டிடப் பாணியில் ஒப்புமை அனைத்தும் இதனுல் விளங்குகின்றது.

கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

தேனோலை

காலாண்டிதழ்

முதல் இதழில் 'மதுக்கரைப் பட்டம்' என்னும் பட்டயத்தின் மூலவாசகம் ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் கிடைக்கின்றது.

சோழன் பூர்வ பட்டயத்துடன் தொடர்ச்சியாக வைத்து ஆராயப்பட வேண்டியது. மதுக்கரைச் செல்லாண்டியம்மன் கோயிலில் 24 நாட்டுக் கவுண்டர்களும் கூடி சிலவகைத் தொழிலாளிகளுடன் செய்து கொண்ட ஒப்பந்தம்.

கொங்கு நாட்டின் சமுதாய வரலாற்றில் இன்றும் ஆதிக்கம் செலுத்துகின்ற சில பழக்க வழக்கங்களுக்கான ஆதாரம். இப்பட்டயம் இன்றும் மக்களிடையே மதிக்கப்படுவது வெள்ளிடைமலே.

ஆண்டுக் கட்டணம்	ரூ.	4-00
மூன்ருண்டுக் கட்டணம்	ரூ.	10-00
ஆயுட் கட்டணம்	ரூ.	100-00

கட்டணம் அனுப்ப வேண்டிய முகவரி:

நிர்வாகி, தேனோலை,

26, இந்திரா நகர், சென்னை-600020.

தொல்லியல்-3

அ. அப்துல் மஜீது, **M. A.,**

2. நிலத்தில் உண்டாகும் பாளநிலைகளைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை :—

பொதுவாக ஒரு நிலத்தை அகழ்ந்தெடுக்கும் பொழுது மிகவும் ஆழத்தில் கிடைக்கும் பொருள்கள் பழமையானதாகக் கருதப்படுகிறது. உதாரணமாக, ஆறுவது பாளநிலைக்குக் கீழே



காணப்படும் பாத்திரங்களும் வீடுகளினுடைய சுவரும் ஆறுவது பாள நிலையினையுடைய காலத்தைச் சார்ந்தவையே ஏழாவது பாள நிலையிலிருக்கும் மட்பாண்டங்கள் உதாரணமாக 3000 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்று வைத்துக் கொள்வோம். அதாவது கி. மு. 1000 ஆண்டுகளாகும். எக்ஸ் என்ற குறியிட்டுள்ள பாத்திரத்தின் காலம் கி பி. 100 ஆண்டாகும். அதாவது அதனுடைய காலம் 5800 ஆண்டுகளுக்கு முற்பட்டவை. இவைகளுக்கிடையே இவ்வளவு காலவித்தியாசம் எவ்வாறு ஏற்பட்டதென்பதை மேலே குறிப்பிட்டுள்ள சுவரின் படத்தை நன்கு உணரலாம். X குறியிட்ட பாத்திரம் சுவரின் அடிபாகத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தச்சுவர் இரண்டாம் பாளநிலையி

லிருந்து கட்டப்பட்டது. இவ்வாறு கட்டும்பொழுது 'X' என்று குறிப்பிடப் பெற்றுள்ள இப்பாத்திரம் இரண்டாம் பாளநிலையிலிருந்து சுவற்றின் அடிப்பாகத்திற்கு சுவர் கட்டும்பொழுது வந்துவிட்டது. ஆகவே இப்பாத்திரம் இரண்டாம் பாளநிலையைச் சார்ந்ததாகும். நன்கு பயிற்சிபெற்ற அகழ்வாய்வாளரினுல் தான் இவைகளைக் கண்டுகொள்ள முடியும்.

3. மரங்களில் உண்டாகும் வளையங்களைக் கொண்டு காலத்தைக் கணிக்கும் முறை :—

ஒரு மரத்தைச் குறுக்காக வெட்டி நாம் பார்ப்போமானுல் அம்மரத்தின் குறுக்கு வெட்டுப்பாகத்தில் ஏராளமான வளையங்கள் இருப்பதைக் காணலாம். ஒரு ஆண்டிற்கு ஒருமுறை ஒரு வளையம் உண்டாகிறது என்ற கணக்கில் அகழ்வாய்விலும், தொல் பொருள் ஆய்விலும் கிடைக்கும் மரத்துண்டுகளின் காலத்தைக் கணக்கிடலாம். மேலும் இவ்வளையங்களின் வளர்ச்சி தட்பவெட்ப நிலையைச் சார்ந்ததாகும் இவ்வளையங்கள் செழிப்பான காலங்களில் பெரியதாகவும், வறண்ட காலங்களில் மென்மையாகவும் இருக்கும்.

மாந்தவியலா?

தொல்லியல் என்பது மானுடவியலா? அல்லது அறிவியலா? என்று கற்றறிந்தோரிடையே ஒரு கேள்விக் குறியாக இருந்து வருகிறது. அறிவியல் முறையால் அதை ஆராய்வதால் அதை அறிவியல் என்றும் ஒரு சாரார் கூறுவர். தொல்லாய்வில் கண்டு பிடிக்கப்பட்ட பொருள்கள் கலை ஆர்வத்தைத் தூண்டக் கூடியதாகவும் கலைநுட்பத்தை வெளிபபடுத்தக் `கூடியதாகவும் வரலாற்றை வெளிப்படுத்தக் கூடியதாகவும் உள்ளதால் அதை மானிட இயல் என்றும் மற்றெரு சாரார் கூறுவர். சுருங்கக் கூறின் தொல்லியலில் மானிட இயலும் அறிவியலும் இரண்டறக் கலந்திருக்கின்றன.

தொல்லியலில் அடங்கியுள்ள சில முக்கியப் பிரிவுகளான அகழ்வாய்வு, கல்வெட்டாய்வு, காசுகளைப்பற்றிய ஆய்வுகள், கட்டடக்கலை, மண்பாண்ட ஓடுகளைப்பயிலும் கலை முதலியவற்றைப் பற்றி சிறிது நோக்குவோம்.

(தொடரும்)

2. தும்பி

புலவர் முத்து. எத்திராசன் B. A.

''வண்டொடு தும்பியும் வண்டொடையாழ் ஆர்ப்ப'' (பரி பாடல் திரட்டு-1) என்ற வரிக்கு உரைகாரர் தும்பி வண்டின் வகையினுள்' ஒன்று என்று கூறுவதாலும்-

''வெயின்கண் போழாப் பயில்பூம் பொதும்பிற்
சிதற்றொழிற் தும்பியொடு மதர்வண்டு மருட்ட''

(பெருங்கதை-33) இவ்வரிகளின் மூலம் தும்பிவேறு வண்டுவேறு என்று நாம் அறிவதாலும்,

''தும்பி அரியினங் கடுக்கும்'' (அகம்-223) என்பதற்கு உரை காரர் 'தும்பி வண்டின் கூட்டத்தை ஒக்கும்' என்று கூறுவதாலும்'

''பொங்குதிரை பொருத வார்மண லடைகரைப் புன்கால் நாவற் பொதப்புற இருங்கனி கிளைசெத்து மொய்த்த தும்பி பழஞ்செத்துப் பல்கா லலவன் கொண்ட கோட் கூர்ந்து கொள்ளா நரம்பின் இமிரும் பூசல் இரைதேர் நாரை யெய்தி விடுக்குந் துறை'' – (நற்றிணை-35) என்னும் பாடலில் 'தும்பி நாவற்பழத்தைத் தம்மினமென்று கருதி மொய்க்க அதனைக் கனி யென்று நண்டானது கைக்கொள்ள அகப்பட்ட வண்டு யாழி சைப் போல பூசலிட அப்போது இரை தேடி வரும் நாரையைக் கண்டு நண்டு தும்பியைக் கைவிட்டு ஓடும்' என்று நாம் அறிவ தால் தும்பி நாவற்பழம் போன்று உருவும் நிறமும் கொண்டது என்பது தெளிவாக அறிய முடிகிறது. மேலும்

''காந்தள் அணிமலர் நறுந்தா தூதுந் தும்பி
கையாடு வட்டில் தோன்றும்'' என்று அகநானூற்றில்

(108-ஆம் பாடல்) அழகாகக் கூறுவதைக் கொண்டு தேனீயை விட சற்று உருவிலும் வடிவிலும் பெரியது என்பதும், அது கரு நிற முடையதென்பதும் அகம் 245 -ஆம் பாடலில் ஆடமைத் தும்பி முயின்ற அகலா அந்துளை கோடைமுகத்தலின், நீர்க்

இயங் இனசிரைப் பின்றை வார்கோல், ஆய்குழற் பாணியின் ஐதுவங் திசைக்கும்'' என்னும் வரிகளில் தும்பி - மூங்கிலைத் துளைத்தது என்பதும் துளைத்த குறுகிய துளை வழியே மேல காற்றுப் புகுந்து வருதலால் எழும் ஓசையானது யூழவின் இசையைப் போன்று இருந்தது' என நாம் அறிவதாலும் 'தும்பி இக்காலத்தவரால் அழைக்கப்படும் 'கருவண்டு' என்பது ஐய மறத் தெளிவாகிறது.

கருவண்டு எழுப்பும் ஒலியானது மிகவும் விரைவாகவும் அதி கமாகவும் இருக்கும் என்பதை அனைவரும் அறிவர். தும்பி (கரு வண்டு) எழுப்பும் ஒலியானது விரைந்து செல்லும் அம்பின் ஓசை போன்றதென்று மிகஅழகாக

''தாதுண் தும்பி முரலிசை கருப்ப
பரியின துயிர்க்கும் அம்பினர்'' என அகநானூற்று 291-ஆம் பாடலின் கண்ணே காணப்படும் வரிகள் நமக்கு தும்பி யாது என்பதனைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது தும்பி கருநிறம் என்பதற்கு மேலும் தும்பியைப் பாடியதால் அதன் பெயர் கொண்டவராகிய தும்பிசேர் கீரனர் தாம்பாடிய நற் றிணை 277-ஆம் பாடலில் தும்பியைப் பார்த்துக் கூறுகின்ற தலைவி வருத்தமிகுதியால் உன்னுடல் மாத்திர மல்ல உள்ளமும் கரியது என்று கூறும்போது அதன் நிறம் தெள்ளத் தெளிவாகி றது. பாடலில் பின்வருமாறு:

கொடியை வாழி தும்பி, ...
மெய்யே கருமை அன்றியுஞ் செவ்வன்
அறிவுங் கரிதோ அறனிலோய் (நற். 277)

*தும்பி *பாம்பு ஈன்ற மணிபோல இருந்தமையால் காந்தள் மலர் மீது இருந்த தும்பியைக் கண்டு தன் மணியென்று மயக்கமடைந்ததாக வரும் அகநானூற்றுப் பாடல்

''திருமணி உமிழ்த்த நாகங் காந்தள்
கொழுமடற் புதுப்பூ ஊதுந் தும்பி
நல்நிற மருளும்'' என்று கூறுகிறது. (அகம் 138)

இதிலிருந்து தேனீக்களைப் போல் கூட்டங்களாக சேர்ந்து மொய்க்

---

* பாம்பு ஈன்றமணி – மாணிக்கம்
* மாணிக்கத்தின் நிறம் நீலநிறம் என்பர்.

காத தனித்த வண்டினை நாம் மேலே எடுத்தாண்ட பாடல்களில் காண்கிறோம். ஆகவே கருவண்டை சங்ககால சான்றோர்கள் 'தும்பி' என்று அழைத்தனர் என்பதை நாம் அறிகிறோம்.

'கட்டளை யன்ன மணிநிறத் தும்பி' (ஐங். 215)
காந்த ளூதிய மணிநிறத் தும்பி' (நற். 17)
'நறுந்தா தூதங் குறுஞ்சிறைத் தும்பி (குறுந் 239)

எனவரும் வரிகளில் காணப்படும் மணிநிறத்தும்பி, குறுஞ்சிறைத் தும்பி என்பவைகளெல்லாம் 'கருவண்டை'ப் பற்றி குறிப்பவை களே. ஆனால்

'கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி' (குறுந். 2)

'அணிச்சிறைத் தும்பி' (குறுந். 392)

இச்சொற்களெல்லாம் கருவண்டைக் குறிக்கா. பின் எதனைக் குறிக்கும் என்றால் பட்டாம் பூச்சியாகும். எவ்வாறெனில்

'அறுசில் கால வஞ்சைத் தும்பி
நூற்றிதழ் தாமரைப் பூச்சினை சிக்குங்
காம்புகண் டன்ன தூம்புடை வேழத்து' எனக்கூறும்

ஐங்குறுநூற்று 20-ஆம் பாடல் 'வேழமானது (கொறுக்கத் தட்டு) ஆறுகிய சில கால்களையும் அழகிய சிறைகிளையுமுடைய தும்பி தாமரைப் பூவின்கண் ஈன்றுள்ள சினைகளை (முட்டை) அழிக்கும்' என்று கூறுவதால் தேனீக்களோ கருவண்டோ தாமரைப் பூவில் முட்டையிடா தென்பதையும் பட்டாம்பூச்சிக்கு அத்தன்மை உண்டென்று அறிவதால் 'அஞ்சிறைத் தும்பி' என்ற சொல் கருவண்டினைக் குறிக்காதென்பதை அறிகிறோம்.

மேலும் அஞ்சிறை என்ற சொல்லுக்குப் பொருள் இலக்கிய வாயிலாகக் காண்போமானால் நமக்குப் பட்டாம்பூச்சி என்பது தெளிவாகும்.

'அஞ்சிறை விரிக்கும் பெருங்கல்' (ஐங்.-300) என்ற வரியில் மயிலின் தோகையை அழகிய சிறை என்று கூறுவதன் மூலம் அஞ்சிறை என்றால புள்ளிகளும் நிறங்களும் பொருந்தியது என அறிகிறோம். அதேபோன்று பட்டாம்பூச்சி (வண்ணத்து பூச்சி) சிறகுகளம் அமைந்துள்ளதை நோக்க 'அஞ்சிறைத் தும்பி' பட்டாம்பூச்சியைக் குறிக்கும் என்பது திண்ணமே.

ஃ

கலவை

7. பிராணிஎன்கின்ற வடசொல்லுக்கு நேரியஆங்கிலச்சொல் 'Animal' என்பதாகும். 'பிராணன்' என்றால் உயிர். மிகவும் கடினமான வேலைகளைச் செய்யும்போது வடமொழியாளர் 'பிராணன்' (உயிர்) போகிறது என்பர். பிராணன் உள்ளது பிராணி ஆகும். இச்சொல்லுக்குப் பொருத்தமுடைய மிக நேரிய தமிழ்ச் சொல் உயிரி என்பதாகும்.

Animal என்று ஆங்கிலத்தில் இப்பொழுது வழங்குஞ் சொல் பண்டைய இலத்தீன் சொல் (Ancient Latin Word) ஆகும். Animal என்ற சொல்லுக்கு வேர் Anima என்ற இலத்தீன் சொல்லே.

Anima - Breath, Life (மூச்சு, வாழ்வு)

ஆகவே, மூச்சு விட்டு வாழ்வன அனைத்தும் உயிரியேயாம். 'விலங்கு' என்றே கூறலாம்.

8. ஒரே நேரத்தில் தாளின் இரு பக்கங்களிலும் அச்சிடுகின்ற புதுவகையான ஓர் அச்சுப்பொறியினை இந்தியர்கள் கண்டுபிடித்துள்ளனர். இப்பொறியைக் கொண்டு மணிககு 3900 முதல் 6000 படிகள் வரை அச்சிடலாம்.

9. சிதம்பரம் என்ற ஊரின் பெயரை சித் + அம்பரம் என்று பிரித்து, சித் என்றால் உயிர்; அம்பரம் என்றால் வான் என்று பொருள் கொள்கின்றனர் வடமொழியாளர். அதாவது சிதம்பரம் என்றால் உயிராகிய வானில் உலாவுவது என்றும் சொற்பொருள் வழங்குகின்றனர். இது பெரும் பிழை.

அம்பலம் என்ற தமிழ்ச் சொல்லிலிருந்துதான் அம்பரம் என்ற வடசொல் உருப்பெற்றது. அம்பரத்திற்குத் தாய் அம்பலமே ஆகவே, சிற்றம்பலத்தின் திரிபுதான், சிதம்பரமாகும்.

சிற்றம்பலம்-சித்தம்பலம்-சித்தம்பரம்-சிதம்பரம்.

10. பாரசிக நாட்டின் புதுப்பெயரே ஈரான் என்ற நாடாகும் இங்குள்ள மக்கள் பாரசிக மொழியைத்தான் பேசுகின்றனர் இந்நாட்டின் தலைநகர் தெக்கரான் ஆகும்.

11. சீனர்கள், பல துறைகளின் தொடக்கத்திற்கு வழி காட்டிகளாக இருந்திருக்கின்றனர். அச்சுத் தொழிலுக்கு வழி காட்டி சீனர்களே. மரக்கட்டைகளில் எழுத்துக்களைச் செதுக்கி, அதன்மீது மை தடவி தாளில் பதித்து, அச்சுத்தொழிலை அறி முகப்படுத்தினர். பின் செருமானியர்கள் கி. பி. 1450-ஆம் ஆண் டில் மாழை (Metal களில் எழுத்துக்களைச் சிறிய அளவில்செய்து அச்சுக் கோர்த்து அச்சிட்டனர். தாளைச் செய்வதற்கு முதன், முதலில் கண்டுபிடித்தவர்களும் சீனர்கள்தாம்,

12. செருமன் கூட்டாட்சிக் குடியரசில் (German Democratic Republic), பணியாற்றும் ஆசிரியர்களில் ஐம்பது விழுக்காட்டின ருக்குமேல் பெண்களேயுள்ளனர். குறிப்பாக, பிஞ்சு உள்ளங் களில் பசுமரத்தாணி போல படிப்பினைப் பதித்திட பெண்ணி னமே பல்லாற்றானுஞ் சிறந்ததென அந்நாட்டவர் கருதுவதில் எள்ளளவும் தவறில்லை.

13, பணவிடைத் தாள்கள், விலைபெறு அஞ்சல் படிவங்கள் [V. P. P Forms], பதிவஞ்சல் கட்டுகளைப் பெற்றுக்கொண்டதற் கான கைச்சாத்து முதலியன இந்தி ஆங்கிலம்,அந்தந்த வட்டார மொழி ஆகிய மும்மொழியிலும் வெளியிட அஞ்சற்றுறையினர் அறிவித்துள்ளனர். வரவேற்பிற்குரியதே. ஆனல் அந்தந்த வட்டாரங்களில், நடுவண் அரசினரால் நடத்தப்பெற்று வரு கின்ற பள்ளிகளில் மட்டும் அவ்வவ்வட்டார மொழி மருந்துக்குக் கூட கிடைக்காது. இஃதென்ன முறையோ! அத்தகைய பள்ளி கள் தமிழ்நாட்டில் 14 உள்ளன. அனைத்திலும் ஆங்கிலமும் இந்தி யும். இதற்கு என்ன, எப்படி, என்று வழி பிறக்குமோ?

14. அரை நூற்றாண்டு காலமாக பாவாணர் ஐயா அவர்கள் அரும்பாடுபட்டு தமிழ்மொழி ஆய்வில் ஈடுபட்டு வருகின்றார்கள். பன்னூற்றுக் கணக்கான சொற்களை ஆய்ந்து தமிழ் எது? தமிழல் லாதது எது? என்று உலகுக்கு எடுத்துக்காட்டி வருகின்றார்.

கலியாணம், சலுகை, சதுரம், கும்மாளம், கோரிக்கை, பிண் டம், குதியாளம், பாசனம், ஆணவம், மாதம், நித்தம், ஆங்காரம், பண்டிதன்—போன்ற சொற்களெல்லாம் தண்டமிழ்ச் சொற்களே யென்று, அந்தந்தச் சொற்களின் வேரினை ஆய்ந்து நிறுவியுள்ளார் கள். இவற்றை இனியேனும் தமிழுலகம் அறிந்து, வழங்கியும் வழங்குவித்தும் தமிழுக்கு அணிசெய்யுமாக.

புலவர் செ. இராசு

அந்தோணியார் விழாவிற்குச் சென்றுவந்தார்.

கச்சத்தீவு நமு
வுகி
றதா?

இடமும் இயற்கையமைப்பும் :—

இராமேசுவரத்தின் வடகிழக்கே 20 கி மீட்டர் தொலைவில் கோழிமுட்டை வடிவிலான அழகிய தீவுதான் கச்சத்தீவு; பரப்பளவு 3 சதுர மைலுக்கும் குறைவு. பனைமரமும், தென்னைமரமும் அடையாளத்துக்கு ஒவ்வொன்று மட்டும் இருந்தாலும் காட்டு அவரைக் கொடியும், அருகு, கோரை, கிழங்கு வகைகள், குட்டையான சில மரங்கள், வேம்பு, புதர் மண்டிக் கிடக்கும் பசுமையான தீவு கச்சத்தீவு.

சில தலைவர்கள் கூறுவதுபோல் கச்சத்தீவு பாறை மட்டும் அல்ல. பாறை, மணல் திட்டுகள் இருந்தாலும் தெற்கு, தென் கிழக்குப் பகுதியைத் தவிர மேற்கு, வடக்கு, வடகிழக்குப் பகுதிகளில் நிலத்தைப் பயன்படுத்த முடியும். வடகிழக்குப் பகுதியில் (அந்தோணியார் ஆலயத்தின் பின்புறம்) சமதரையாக 35 ஏக்கர் அளவில் உள்ளது. அதை நல்வயலாக மாற்றமுடியும்; தென்னையும் பயிரிடலாம். பல கால்நடைகளுடன் சில குடும்பங்கள் குடியேறலாம்; அண்மையில் அங்கு எண்ணெய் இருப்பதாதச் செய்தி வந்திருப்பது அதன் சிறப்பை மிகுதியாக்குகிறது. சேது சமுத்திரத்திட்டம் நிறைவேறினல் இத்தீவு மிகப் பயன்படும். இப்போது இத்தீவில் எவரும் குடியில்லை.

இலங்கையரின் முற்றுகை :—

அந்தோணியார் விழா முடிவதற்கு ஒருநாள் முன் 23-3-74 காலை கச்சத்தீவிற்குச் சென்ற என்னை வரவேற்றது போர்ப்படகுகள் புடைசூழ இலங்கைப் போர்க்கப்பல் கஜபாகு தான். அக்

கப்பல் அதிகாரிகள் தீவிலும் இறங்கி முகாமிட்டிருந்தனர். கடற்படை வீரர்களுடன் இலங்கைப் போலீசார், புலன் ஆய்வுத் துறையினர் ஆங்காங்கே மக்களுடன் இருந்தனர்.

இலங்கை இராணுவத்தினர் கரும்பச்சை நிறக் கூடாரத்தின் உள் இருந்துகொண்டு கம்பியில்லாத் தந்தி மூலம் தங்கள் நாட்டுடன் அடிக்கடி தொடர்பு கொண்டனர். நம்முடைய மாவட்ட வருவாய்த்துறை அதிகாரிக்குச் சமமான 'காரிய அதிகாரி' (ஐ. ஏ. எஸ். போல எஸ். எல். ஏ.) ஒருவர் அந்தோணியார் ஆலயத்தில் இருந்தார். அவர் பெயரைக்கூட நான் அறிவேன். காலையிலும் மாலையிலும் இலங்கை விமானப்படையின் விமானம் ஒன்று தீவை வட்டமிட்டது.

மத அடிப்படையில் உரிமை கொண்டாடுவதற்காக யாழ்ப்பாணம் பிஷப் விழாத் தொடக்கத்திற்கு 4 நாள் முன் தீவுக்கு வந்ததாகவும். விழாவிற்குத் தன் அடுத்த குருவாகிய 'வைகார் ஜெனரலை' அனுப்பியதாகவும் தெரிகிறது. இலங்கையிலிருந்து தேவராஜா. சாம்பிள்ளை, சந்தியாபிள்ளை, பையஸ், குரு போன்ற பாதிரிமார்கள் வந்திருந்தனர். பாதிக்கு மேற்பட்ட யாத்திரிகர் தமிழ் நாட்டவராயிருக்க தமிழ் நாட்டுப் பாதிரிமார்கள் எவரும் அதிகார பூர்வமாகச் செல்லவில்லையே! அது ஏன்?

தடுத்தது யார்?

மதுரை (கத்தோலிக்க) பிஷப்பின் ஆட்சிக்குட்பட்ட பங்கான தங்கச்சிமடத்தின் பாகமாகத்தான் கி. பி. 1820 முதல் கச்சத்தீவு இருந்து வருகிறது, நம் நாட்டுக் குருமார்கள்தாம் கொடியேற்றி விழாக் கொண்டாடினர். அவர்களை அதிகார பூர்வமாகப் போகவேண்டாம் என்று தடுத்தது யார்? அதன் மூலமாக விழா அனைத்தும் இலங்கை மயமாகி அவர்கள் பொய்யாக உரிமை கொண்டாட வழிவகுத்த 'பெரியவர்கள்' யார் என்பது புரியவில்லை. இவ்வாண்டு காணிக்கையாக எதிர்பார்க்கும் சுமார் 60000 ரூபாயும் இலங்கைக்கே சேர்கிறது.

சில ஐயங்கள் :—

இராணுவம், காவல்துறை, நிருவாகம், சமயம், வழிபாடு போன்ற எல்லாத்துறைகளிலும் வழக்கத்துக்கு மாறாக இலங்கை அரசு முற்றுகையிட்டுச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கும் இந்நிலையில் நம்தரப்பில் எம்முயற்சியும் தொடர்ந்து இல்லை என்பதை நோக்க நமக்குத் தலைப்பில் கண்ட ஐயம்தான் வருகிறது.

தமிழ்நாட்டின் பகுதியே கச்சத் தீவு :—

* "விக்டோரியா அரசியாரின் அறிக்கை ஒன்றில் கச்சத்தீவு இலங்கைக்குச் சொந்தமானது அல்ல; இராமநாதபுரம் மன்னர்க்குச் சொந்தமானது" என்று கூறப்பட்டுள்ள செய்தியை இலங்கையின் அமைச்சரவைச் செயலாளர் பி. பி. பெரிசு கூறியுள்ளார். (1936-மே)

* 1880 சூன் 20-ஆம் நாள் இராமநாதபுரம் பத்திரப்பதிவு அலுவலகத்தில் சாயவேர் சேகரிக்க இரு இந்தியர்களுக்கு இராமநாதபுரம் அரசர் குத்தகைக்குக் கச்சத்தீவை விட்ட ஆவணம் உள்ளது.

1885-ஆம் ஆண்டு இராமநாதபுரம் அரசர் கச்சத்தீவில் மீன் பிடிக்கவும், சங்கு சேகரிக்கவும் உரிமை அளித்த ஆவணங்களும் கடிதங்களும் உள்ளன

* 1911-ஆம் ஆண்டு வெளியிட்ட இராமநாதபுரம் சமத்தானத்தின் பட்டியலில் தீவு குறிக்கப்பட்டுள்ளது.

* 21-10-1921ல் இலங்கை- சென்னை அரசுப் பேச்சு வார்த்தையின்போது சென்னைப் பிரதிநிதி கச்சத்தீவு இந்தியப் பகுதியே என்பதைக் கொழும்பில் நிரூபித்தார்.

* 1954-ஆம் ஆண்டு இலங்கை வெளியிட்ட சர்வே படத்தில் கச்சத்தீவு இலங்கையின் பகுதியாகக் காட்டப்படவில்லை. அதையொட்டி 1956ல் வெளியிட்ட படத்தில் இலங்கை வடமாநிலத்தின் எல்லாத் தீவுகளும் இருக்க (காரைதீவு எழுவத்தீவு, அனலத்தீவு, வேலணைத்தீவு, நயினாத்தீவு, புங்குடுத்தீவு, நெடுந்தீவு, பாலைத்தீவு, ககேரத்தீவு, காகத்தீவு, இரணைத்தீவு............எருமைத்தீவு) கச்சத்தீவு குறிக்கப்படவில்லை. (இப்படம் என்னிடம் உள்ளது.)

* இந்தியாவின் அட்டர்னி செனரல் நிரேன்டே "கச்சத்தீவு அன்றும்சரி; இன்றும் சரி; இந்திய நாட்டின் உரிமைதான்" என்று கூறியுள்ளார்.

* இராமநாதபுரம் இளைய மன்னர் திரு காசிநாததுரையும், பாராளுமன்ற உறுப்பினர் திரு முகமது செரீப் அவர்களும் இச்சான்றுகளை மைய அரசுக்கு அளித்துள்ளனர். முன்னாள் உள்துறை அமைச்சர் தினேசுசிங் உறுதியளித்தபடி இன்னும் சட்டநிபுணர் எவரும் வந்து மேற்கண்ட சானறுகளைப் பார்வையிடவில்லை. (இது என்?)

* 68 ஆண்டுகளுக்கு முன் படையாச்சி ஒருவர்தான் அந்தோணியார் கோயிலைக் கட்டினர். ஓலை 2-1-51ல் ஓடாக மாற்றப்பட்டது. ஓடுகள் அனைத்தும் பெரோக்கிலும், (கள்ளிக் கோட்டை) மங்களூரிலும் தயாரிக்கப்பட்டவை.

* தமிழகக்கடற்கரை ரோமன் கத்தோலிக்க மீனவர்கள் அந்தோணியார் மீது பற்றும் பக்தியும் உடையவர்கள். தமிழகக் கடற்கரையில் பல ஊர்களில் அந்தோணியார் கோயிலைக் கட்டியிருப்பதுடன், தம் குழந்தைகட்கும் அப்பெயரை வைத்து, அந்தோணியார் மொட்டை எனப்படும் ஒரு மொட்டையையும் அடிப்பார்கள்; எனவே தமிழகத்தார் கட்டிய கோயில் என்பதில் ஐயமே இல்லை. ஆலய அமைப்பே தமிழக அமைப்புத்தான்.

* தீவின் பெயருக்கும், கோயிலுக்கும் பல பொய்யான பெயர்க் காரணங்களை இலங்கைப் பாதிரியார்கள் கூற முற்படுகின்றனர். பாராமுகமாக இருப்பதைக் கண்டு தமிழர் ஒவ்வொருவரும் அதிர்ச்சி கொள்கின்றனர்.

செய்தி கேட்டீர்களா ?

தில்லி இதழ்களில் கச்சத்தீவு இந்தியாவுக்கு இல்லை என முடிவு செய்யப்பட்டதாகச் செய்தி வந்துள்ளது-மறுப்பாரைக் காணேன்.

11-3-74ல் பாராளுமன்றத்தில் ஓ. பி. தியாகி 'கச்சத்தீவு இந்தியாவின் பகுதி என்று திட்டவட்டமாக அறிவிக்க வேண்டும்' என்றார்--அரசு மௌனம் சாதிக்கிறது.

இராமேசுவரத்திலும். கச்சத்தீவிலும் நான் கண்டு கேட்ட நிகழ்ச்சிகள் மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. கச்சத்தீவைக் காத்தே திருவோம்.

—இராசு

பின்குறிப்பு: பாவம் புலவர் இராசு. இவர் என்னதான் கரடியாகக் கத்தினாலும் பாரதப் பிரதமர் காதில் விழப்போவதில்லை. கச்சத்தீவுப் பிரச்சினையை பழைய வரலாற்று அடிப்படையில் தீர்க்கப்போவதில்லை. கடலுக்குள் இந்திய, இலங்கையின் சர்வதேச எல்லையை வரையறுக்க வேண்டியது கச்சத்தீவு எந்த எல்லைக்குள் விழுகின்றதோ அந்த நாடு எடுத்துக் கொள்ளும்.

இந்திரா-சிறீமாவோ ஒப்பந்தம் அதுதான். புலவர் இராசு கல்வெட்டுத்தேடிப் பயனில்லை. அளவுகோல் பிடிக்கவேண்டும்.

—கொடியன்

Phone Offi. : 83745 Resi. : 811455

RAVI METAL WORKS

Manufacturers of

Automobile Agricultural Components
Sanitary & Pump Fittings

3/129, Dr. NATESAN ROAD,

TRIPLICANE : : MADRAS-5

விரைவாக-
வேகமாக-
ஏ. பி. டி.
பார்சல் சர்வீஸ்
சேவைசெய்கிறது.

விரைவுக்கு அனுமன்

கம்பர் சொன்னார் :

" எண்ணுக்கும்
அளவிலாத
அறிவினோர்
இருந்து நோக்கும்
கண்ணுக்கும்-
கருதும்
தெய்வ மனத்துக்கும்
கடியன் ஆனான் "

எண்ணத்தைவிட-
அளவற்ற ஞானச் செல்வர்களின் யோகக்
காட்சியைவிட-
தேவர்களின் மனத்தைவிட
வேகமாகப் பாய்ந்து சென்றான் அனுமன்.

A. B. T. பார்சல் சர்வீஸ்

226, டாக்டர் நஞ்சப்பா சாலை, அஞ்சற்பெட்டி எண் 1414
கோயம்புத்தூர் - 18.

ஆசிரியர் : புலவர் செ. இராசு
அச்சிட்டவர் : து. இராஜலட்சுமி, ரேணுகா பிரிண்டர்ஸ், [சென்னை-20
வெளியிட்டவர் : ச. பிரகதம்..
அலுவலகம்: 26, இந்திரா நகர், சென்னை-600020.